
வெளிப்படுத்தல் புத்தகம் கூறும்

# 7 சபைகள்

விளக்க நூல்



பாஸ்டர். M.தாமஸ்
இந்திய தேவசபை

அமைதிநேர நண்பன் வெளியீடு

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# 7 சபைகள்

(விளக்க நூல்)

எழுதியவர்: பாஸ்டர்.M.தாமஸ்

அமைதிநேரநண்பன் வெளியீடு

2011

# உள்ளடக்கம்


i. வெளிப்படுத்தல் சுவிசேஷம் – அறிமுகம் – 6

ii. சபையைப் பற்றிய வெளிப்பாடு – 9

1. எபேசு சபை – 12

2. சிமிர்னா சபை – 16

3. பெர்கமு சபை – 19

4. தியத்தீரா சபை – 22

5. சர்தை சபை – 25

6. பிலதெல்பியா சபை – 28

7. லவோதிக்கேயா சபை – 34

iii. ஜெயங்கொள்ளுகிறவன் – 37

# பதிப்புரை

இயேசுகிறிஸ்து அப்போஸ்தலனாகிய யோவானுக்கு ஏழுசபைகளைக் குறித்து வெளிப்படுத்தினார். சபைகளின் உண்மையான நிலைமையை அவரைவிட அதிகமாக வேறு யார் அறிந்திடக் கூடும்.

ஒவ்வொரு சபைகளிலும் காணப்பட்ட நிறை மற்றும் குறைகளை சுட்டிக்காட்டிய நம் ஆண்டவர், அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதையும் சொல்லத் தவறவில்லை. இன்றைய சபைகளுக்கும் கூட அந்த ஏழு சபைகளுக்குச் சொல்லப்பட்டவைகள் நன்றாகப் பொருந்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இந்த சிறு புத்தகத்தை வாசிக்கும் நீங்கள் தேவன் உங்களுக்கு உணர்த்துவதை அறிந்து, புரிந்து சரிசெய்யவேண்டுவனவற்றை சரிசெய்து கொள்ள உதவுவாராக. நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே! (1கொரிந்தியர்.3:16, 2கொரிந்தியர்.6:16)

# ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சில வருடங்களுக்கு முன்பு சபை ஊழியத்தில் மிகுந்த போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்த நிலையில், சபையில் அன்புகூர்ந்து, அதற்காகவே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இப்போதும சபையை விசாரிக்கிறாரா? போஷிக்கிறாரா? காப்பாற்றுகிறாரா? ஏன் கிறிஸ்தவ சபைகளில் பலவித குறைபாடுகள் உள்ளன என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களில் ஆசியாவில் இருந்த ஏழு சபைகளை (உயிர்த்தெழுந்து என்றும் ஜீவிக்கிற) இயேசுகிறிஸ்து யோவானுக்குக் காண்பித்ததை வாசித்து தியானிக்கும்படி உணர்த்தினார். அவ்வண்ணமே அவைகளைத் தியானித்து, ஏழுவாரங்களாக அந்த ஏழுசபைகளைக் குறித்து பிரசங்கித்தேன்.

மேலும் அதை எழுத்துவடிவிலும் துண்டுப் பிரசுரங்களாக விசுவாசிகளுக்குக் கொடுத்தோம். அவை மிகவும் பிரயோஜனமாக இருந்தது. ஏழு சபைகளைப் பற்றிய அந்த செய்திகளை ஒரு சிறிய புத்தகமாக வெளியிடவேண்டும் என்பது

*அமைதிநேர நண்பன்* இதழாசிரியர். அற்புதராஜ் அவர்களின் விருப்பம் ஆகும். அவர்களின் முயற்சிக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன.

ஏழு சபைகளைக் குறித்த தியானத்தின் முடிவுரைதான் என்ன? - சபையானது கர்த்தர் உணர்த்துகிற குறைபாடுகளை உணர்ந்து மனம் திரும்பவேண்டிய காரியங்களில் மனம் திரும்ப வேண்டும்.

*இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, பரலோக ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன்* என்று சொன்ன இயேசுவின் அதிகாரத்தைப் பெற்று அன்புதாழ்ச்சி, கள்ளப் போதகங்கள், கள்ள தீர்க்கதரிசனங்கள், சாத்தானின் கூட்டத்தார் மற்றும் ஆவிக்குரிய அசதி போன்றவைகளின் மேல் இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஜெயம் கொடுக்கும் தேவனாலே வெற்றிபெற வேண்டும். அப்பொழுது சபை மகிமையுள்ள சபையாக பிரகாசிக்கிறதாயிருக்கும்.

பாஸ்டர்.M.தாமஸ்
இந்திய தேவ சபை
செய்துங்கநல்லூர்
தூத்துக்குடி மாவட்டம்

## வெளிப்படுத்தின விசேஷம் - அறிமுகம்

பனிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான யோவான் தன் முதிர்ந்த வயதில் தேவவசனத்தின் நிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிற்கு நாடு கடத்தப் பட்டு அங்கு கைதியாக இருந்த காலத்தில், ஆசியாவில் உள்ள ஏழு சபைகளில் குறைவுகள் காணப்பட்ட காலத்தில், கர்த்தருடைய நாளில் அதாவது சபை கூடி வருகிற நாளாகிய வாரத்தின் முதல் நாளான ஒரு ஞாயிற்றுக் கிழமையில் அவர் ஆவிக்குள்ளானார். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார் என்று கூறலாம். பரி.ஆவியினால் நிரப்பப்பட்ட யோவான் உயிர்த்தெழுந்த இயேசுவை ஏழு குத்து விளக்குகளின் மத்தியில் நிற்கிறதையும், உலாவிக்கொண்டிருக்கிறதையும் கண்டார். இயேசுகிறிஸ்து தாம் இருக்கிற வண்ணமாக, மகிமை நிறைந்தவராக, வல்லமை நிறைந்தவராக தம்மை வெளிப்படுத்தினார். ஆசியாவில் உள்ள ஏழு சபைகள் இருந்த நிலைமையைக் குறித்து வெளிப்படுத்தினார்.

அவருடைய சத்தம் பெரிதான சத்தமாயிருந்தது, பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தேவாதி தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேல் சபையோடு பேசின போதும் எக்காளச் சத்தம் போன்ற

சத்தத்தைக் கேட்டார்கள். அவர் நீண்ட அங்கி தரித்திருந்தார். மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தார். அந்த பொற்கச்சை அவர் சத்தியபரர் என்றும் (எபேசியர்.6:14), அவர் யோவானுக்கு சொல்வதும், சொல்லப் போவதும் சத்தியம் என்றும் வெளிப்படுத்திக் கொண்டிருந்து. அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. இது அவர் ஆதியில் இருந்தவர் என்றும், முந்தினவர் என்றும் அல்பா என்றும் வெளிப்படுத்திற்று.

அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலை போன்றிருந்தது. அவைகள் பாவத்தையும் சாத்தானின் வல்லமையை சுட்டெரிக்க வல்லமையுள்ளதாயும், எல்லா மனுபுத்திரரின் இருதயங்களையும் சோதித்தறிகிறதாயும் இருந்தது.அவருடைய பாதங்கள் பிரகாசமான வெண்கலம் போன்றிருந்தது. அது பிதாவாகிய தேவன் சகலத்தையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார் என்று பவுல் எபேசியர்.1:22ல் கூறுவதை நினைவு படுத்துகிறது.

அவருடைய வாயில் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. ***புறப்பட்டது*** என்ற வார்த்தை அவர் சாத்தானின் ராஜ்ஜியத்தையும், அவனுடைய கிரியைகளையும் முற்றிலுமாய் அழிக்கத் தொடங்கிவிட்டார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவருடைய முகம்

வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது. அதாவது அவர் சபைகளின் மேல் கிருபை நிறைந்தவராய் இருக்கிறார் (எண்ணாகமம்.6:25,26) என்பதை வெளிப்படுத்துகிறது.

இயேசுவை இவ்விதமாக தரிசித்த யோவான் செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தான். அப்போழுது இயேசு தம்முடைய வலதுகரத்தை யோவான் மேல் வைத்து, *பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்* எனறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! சர்வ வல்லவராகிய இயேசு இன்று உங்களைப் பார்த்து பயப்படாதே! என்று சொல்கிறார். அவர் கரத்திலிருக்கிற் திறவுகோல்கள் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் அவருக்குண்டு என்பதை வெளிப்படுத்துகிறது. உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்களை தடை செய்யும் சாத்தானின் கதவுகளை அவர் திறக்க வல்லவராயிருக்கிறார்.

# சபையைப் பற்றிய வெளிப்பாடு

வெளிப்படுத்தின விசேஷம் முதல் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவை சர்வ வல்லவராக, சர்வ மகிமை நிறைந்தவராக அப்போஸ்தலனாகிய யோவான் கண்டார்.நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று இயேசுகிறிஸ்து சொன்னார் (வெளிப்படுத்தல்.1:11). என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம் எனறார்(வெளிப்படுத்தல்.1:20).

சபைகளை பொன் குத்துவிளக்குகளாக பரிசுத்தஆவியானவர் காண்பித்தார்.

**1.சபை விலையேறப்பெற்றது.**

தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொள்ளுமளவுக்கு அது விலையேறப்பெற்றது(அப்போஸ்தலர்.20:26). கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே! என்று பவுல் சபையைக் குறித்து கூறுகிறார்(1கொரிந்தியர்.5:20).

அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர் களென்று அறிந்திருக்கிறீர்களே என்று பேதுரு சபையைக் குறித்து கூறுகிறார் (1பேதுரு1:18,19).

பரலோக இராஜ்ஜியம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு மததேயு.13:44ல் கூறினார். தேவனுக்கு சொந்தமான சபையே நீ தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற, பொன்னினால் செய்யப்பட்ட விளக்கு போலிருக்கிறாய்.

ஏழு சபைகளின் மத்தியில் நிற்கிறவராக, உலாவுகிறவராக கிறிஸ்து காட்சி அளித்தார். நாம் சபையாக கூடி வரும் போது அவர் நம் நடுவே வருகிறார். அவரைத் தொழுது கொள்ளும் பொழுதெல்லாம் அவர் நமக்கு சமீபமாக இருக்கிறார்.

இந்த ஏழு சபைகளிலும் கர்த்தர் சில நிறைகளையும் குறைகளையும் காண்கிறதாக பிற்பாடு கூறுகிறார். எனினும் குறைகள் இருந்தாலும் அவர் சபைகளின் நடுவில்தான் உலாவுகிறார். சபையில் உள்ள குறைகளை, பிழைகளை நீக்க, சபையைக் காப்பாற்ற, சபையைப் போஷிக்க, அதை மகிமையுள்ள (ஒளிவீசும்) சபையாக மாற்றுவதற்கே அவர் சபைகளின் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறார்.

## 2.சபை ஒளி வீசக் கூடியது.

யோவான் சபைகளை விளக்காக கண்டார். உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் தெரிய வரவேண்டும் என்பது தேவனுடைய நோக்கம்.

கிறிஸ்துவின் சபை இருள் நீக்கும் வெளிச்சம் ஆகும். கிறிஸ்து எப்படி மரண இருளின் திசைகளில் இருந்த ஜனங்களுக்கு வெளிச்சமாயிருந்தாரோ அதே போல சபையும் சமுதாயத்தில் இருளை நீக்கும் வெளிச்சமாயிருக்கிறது. கிறிஸ்து எப்படி அந்தகார வல்லமைகளை, இருளின் (சாத்தானின்) அதிகாரங்களை மேற்கொண்டாரோ அவ்விதமே சபையும் சாத்தானின் வல்லமையை மேற்கொள்ளும் வல்லமை படைத்தது.

இதை வாசிக்கிற தேவனால் பிறந்த விசுவாசிகளே! நீங்கள் விலையேறப் பெற்றவர்கள். நீங்கள் பிசாசின் கிரியைகளை அழிக்க வல்லமையுடையவர்கள்.

# 1.எபேசு சபை

வாசிக்க : வெளிப்படுத்தல்.2:1- 7

ஆசியாவிலிருந்த ஏழு சபைகளில் முதலாவதாக எபேசு சபைக்கு இயேசு கிறிஸ்து தனது செய்தியைக் கூறுகிறார். யோவானை நோக்கி எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்று கூறுகிறார். *சபையின் தூதன்* என்பது சபைக்கு கண்காணியாக, மேய்ப்பராக, அல்லது போதகராக இருப்பவரைக் குறிப்பிடுகிறது. தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கை யாயிருங்கள் என்று அப்போஸ்தலர்.20:28ல் பவுல் சபைப் போதகர்களுக்குக் கூறுவதை வாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரே ஒருவரை சபையின் கண்காணியாக நியமிக்கிறார். ஒரு சபையின் நிலைமையை தேவன் அந்த சபைக்கு நியமிக்கப்பட்ட அதின் போதகருக்கு வெளிப் படுத்துகிறார். இஸ்ரவேல் சபைக்கு கூற வேண்டிய அனைத்தையும் கர்த்தர் மோசேயிடம் கூறினார், மோசே அவைகளை ஜனங்களுக்கு கற்பித்தார். சபைப்போதகர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரராகவும் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக் காரராகவும் இருக்கிறார்கள் (1கொரிந்தியர்.4:1).

ஒரு சபையை, அதின் நிலைமையை தேவன் நன்றாக அறிந்திருக்கிறார். எபேசு சபை விசுவாசிகளைக் குறித்து கர்த்தர் அறிந்திருந்தது என்ன? கர்த்தர் அந்த சபையில் என்ன நிறைவுகளைக் கண்டார்?

1).அந்தச் சபையை கிரியை செய்யும் சபையாக, பிரயாசப்படும் சபையாகக் கண்டார். அவருடைய நாமத்துக்காக இளைப்படையாமல் பிரயாசப்படும் சபையாகக் கண்டார். அதாவது ஒரு சபை செயல்படும் சபையாக இருக்க வேண்டும். தேவன் தம்முடைய கிரியைகளை சபை மூலமாகவே செய்கிறார்.

2) எபேசு சபையார் பொல்லாதவர்களை சகிக்கவில்லை. கொரிந்து சபையார் பொல்லாத ஒருவனை சபையில் விசுவாசியாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள் (1கொரிந்தியர்.5). கிறிஸ்துவின் சபை சபையில் நடக்கும் பொல்லாங்குகளை சகித்துக் கொண்டேயிருக்கக் கூடாது. பொல்லாங்களை சபையை விட்டு நீக்க வேண்டும்.

3) எபேசு சபையார் பொல்லாத அப்போஸ்தலரை கண்டறிந்து கொண்டார்கள். சபையானது பகுத்தறியும் ஆவியுள்ளதாய் காணப்பட வேண்டும். பொய்யர்களைக் கண்டறிந்து, அவர்கள் சபையை பாழாக்கி விடாதபடி அப்படிப் பட்டவர்களை விலக்க வேண்டும்.

4.) நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை எபேசு சபையார் வெறுத்தார்கள். மாம்ச இச்சைகளை கட்டுப்படுத்த அவசியமில்லை என்பது தான் இந்த மதஸ்தரின் போதனை. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது இவர்களின் உபதேசம். சபையானது பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் (ஆளுகைக்குள்) இருக்க வேண்டும். சரீரம் கர்த்தருக்கே உரியது. அதைக் கறைப்படுத்த நமக்கு அதிகாரம் இல்லை. ஆவியின் கனியோ இச்சையடக்கம் என்று கலாத்தியர்.5:22 கூறுகிறது.

இவ்வளவு நிறைகளை கர்த்தர் எபேசு சபையிலே கண்டாலும், ஒரு மிகப் பெரிய குறையைக் கண்டு எச்சரிக்கிறார். நீ ஆதி அன்பை இழந்தாய், நீ விழுந்தாய் என்று கூறுகிறார்.

சபை எவ்வளவுதான் கிரியை செய்யும் சபையாக இருந்தாலும், உபதேசத்திலும் பரிசுத்தத்திலும் கட்டுப்பாடான சபையாக இருந்தாலும் தேவன் பேரில் வைக்கும் அன்பிலும், விசுவாசத்திலும், ஒருவர்மேல் ஒருவர் வைக்கும் அன்பிலும், பிறரிடத்தில் அதாவது தேவ அன்பு தேவையுள்ள தேவனை அறியாத ஒரு மனிதனிடத்திலும் அன்பு கூறாமல் போனால் அதை விழுந்து விட்ட சபையாகவே கர்த்தர் காண்கிறார்.

இந்த நிலையில் இருந்து மனம் திரும்பு இல்லாவிட்டால் விளக்குத் தண்டை அதாவது என் பிரசன்னத்தை உன்னிடத்தில் இருந்து நீக்கி

விடுவேன் என்கிறார். இந்த விழுந்து போன, அன்பற்ற நிலையிலிருந்து வெற்றி பெறுகிறவர்களுக்கு பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் (நித்திய ஜீவ) கனியை புசிக்கக் கொடுப்பேன் என்று இயேசுகிறிஸ்து சொன்னார்.

அன்பின் பிதாவே! நாங்கள் அன்பில் குறைவுள்ளவர்கள். நாங்கள் சத்திய வசனத்தை கேட்டு விசுவாசிகளான போது நீர் எங்களுக்கு அன்பின் ஆவியை தந்தீர். ஆவியின் படி நடக்க கிருபை தாரும். பரிசுத்த ஆவியின் ஆளுகைக்கு ஒப்புக் கொடுக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலம் ஜெபிக்கிறோம். ஆமென்.

## 2.சிமிர்னா சபை

வாசித்து தியானிக்க : வெளிப்படுத்தல்.2:8-11

சிமிர்னா என்ற பட்டணத்தில் இருந்த சபைக்கு எழுது என்று யோவானோடு கர்த்தர் கூறினார்.அந்த சபையின் நிலையைக் கர்த்தர் நன்றாக அறிந்திருந்தார். இந்த சபை பாடுபடும் சபையாக இருந்தது. சாத்தானுடைய கூட்டத்தார் அதாவது யூதர்கள் இவர்களை தூஷித்தார்கள். பிசாசானவன் அதாவது ரோம அரசாங்கம் அவர்களில் சிலரை காவலில் வைத்தது. இவர்கள் சோதிக்கப்பட்டார்கள், உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். பல பாடுகளை அனுபவித்தார்கள். சாத்தானின் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மேலும் இந்த சபையில் இருந்தவர்கள் ஏழைகளாகவும் இருந்தார்கள். இந்த சபையார் பொருளாதாரத்தில் தரித்திரராயிருந்தாலும், தேவனிடத்தில் ஐசுவரியம் உள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா.12:21). விசுவாசத்தில் ஐசுவரிய முள்ளவர்களாயிருந்தார்கள் (யாக்கோபு.2:5).

ஆதி முதற்கொண்டு கிறிஸ்துவின் சபை இவ்விதமான உபத்திரவங்கள் வழியாகத்தான் சென்றுகொண்டிருக்கிறது. இப்போது இருக்கிற

சபைகளும் கூட இவ்விதமான் பாடுகளை சந்திக்க நேரிடும். இந்த சபை அனுபவித்து வருகிற அத்தனை பாடுகளையும் *நான் அறிந்திருக்கிறேன்* என்று நம் கர்த்தராகிய இயேசு கூறினார். *நானே நல்ல மேய்ப்பன். நான் என்னுடையவைகளை அறிந்திருக்கிறேன். என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்* என்று இயேசு யோவான்10:14,15ல் கூறுகிறார்.

*பிரியமானவர்களே உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெறிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு பங்காளிகளானதால் சந்தோசப்படுங்கள்.* என்று பேதுரு கூறினார் (1பேதுரு4:12.13).

இயேசு கிறிஸ்து நம் ஏழ்மையையும் பாடுகளையும், அனுபவிக்கிற தூஷணங்களையும் அறிந்திருக்கிறார். உன் கண்ணீரை அவர் கணக்கில் வைத்திருக்கிறார். நிச்சயம் ஒரு நாள் பலன் கொடுப்பார். அவரோடுகூட பாடுபடுவோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்.

இதை வாசிக்கிற தேவ பிள்ளையே, நீ படுகிற பாடுகளைக் குறித்து, ஏழ்மையைக் குறித்து பயப்படாதே. மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்

என்கிறார் இயேசு. அவர் தம்மை அனுப்பின பிதாவுக்கு சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்திருந்தார், உண்மையாயிருந்தார் (பிலிப்பியர்.2:8). நாம் உபத்திரவப்படும் போது, பாடுபடும்போது உண்மையாயிருப்பது மிகக் கடினமான காரியம். ஆனால் பயப்படாதே! என்று முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைதவருமானவர் கூறுகிறார். அவர் பிழைத்திருக்கிறார், உயிரோடு இருக்கிறார். மரணத்தினால் அவர் கட்டப்படக் கூடாதிருந்தது.

கிறிஸ்துவினிமித்தம் பாடுபடும் சபையே! பாடுபடும் விசுவாசியே! உனக்கு கர்த்தர் கூறும் எச்சரிப்பு *மரண பரியந்தம் உண்மையாயிரு* உனக்கு கர்த்தர் தரும் வாக்குத்தத்தம் *நீ இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை* (வெளிப்படுத்தல்.21:18). கர்த்தர் உனக்கு கொடுக்கும் ஆறுதல் ***பயப்படாதே,*** நான் மரித்திருந்தும் பிழைத்திருக்கிறவர்.

## 3.பெர்கமு சபை

*வாசித்து தியானிக்க : வெளிப்படுத்தல் 2:12-17.*

பெர்கமு சபைக்கு கர்த்தர் தன்னை வெளிப் படுத்தும் போது இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவராக காண்பிக்கிறார். இது ஆத்துமாவையும் ஆவியையும் உருவக் குத்துகிற இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகை யறுக்கிற தேவனுடைய வார்த்தையைக் காண்பிக்கிறது. மேலும் பட்டயமானது நியாயத் தீர்ப்பைக் குறிக்கிறது. ஏன் கர்த்தர் தன்னை இந்த சபைக்கு இவ்விதமாக காண்பிக்கிறார்?

கள்ளபோதகங்களை கைக்கொள்ளு கிறவர்கள் இந்த சபையில் இருந்தார்கள். பிலேயாமின் போதகம் மற்றும் நிக்கோலாய் மதஸ்தரின் போதகம் இந்த சபைக்குள் இருந்தது. அதாவது பழைய ஏற்பாட்டு சபையாகிய இஸ்ரவேல் மக்கள் முன்பு பிலேயாம் ஒரு இடறலை போட்டான். இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க முடியாது, தேவன் இந்த ஜனங்கள் பட்சத்தில் இருக்கிறார் என்பதை பிலேயாம் அறிந்து கொண்டான். அவர்களை தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய வைத்து விட்டால், தேவனே அவர்களைக் கைவிடுவார், அப்பொழுது அவர்கள் தானாகவே அழிந்து விடுவார்கள் என்று

அறிந்து அவர்கள் பாவம் செய்வதற்கான இடறலை, அதாவது மோவாபியப் பெண்களை இஸ்ரவேல் ஜனங்களின் பாளையத்துக்குள் அனுப்பும்படி பாலாகுக்கு போதித்தான். அந்தக் கண்ணியை அறியாமல் இஸ்ரவேல் சபை இடறியதால் ஒரே நாளில் 24000 பேர் வாதையினால் செத்தார்கள் (எண்ணாகமம்.25:1-9).

பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டு ஆவிக்குரியவன் போலக் காணப் பட்டாலும், அவன் பணத்துக்கும், கனத்துக்கும் (புகழுக்கும்) ஆசைப்பட்ட குறிசொல்லுகிறவனே! ஆவிக்குரியவர்கள் போலக் காண்பித்துக் கொண்டு இன்னும் சொல்லப் போனால் தீர்க்கதரிசனம் கூட சொல்லுகிற பிலேயாம் போன்றவர்கள் சபைக்குள் காணப்படலாம். இப்படிப் பட்டவர்கள் மற்ற விசுவாசிகளை இடறப் பண்ணுவார்கள். *இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவன் கழுத்தில் ஏந்திரக் கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்தில் அவனை அமிழ்த்துவது அவனுக்கு நலமாயிருக்கும்* என்று கர்த்தராகிய இயேசு கூறினார். இப்படிப்பட்ட பிலேயாம்களுக்கு விரோதமாக, அவனுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு விரோதமாக கர்த்தர் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்துடன் வருகிறார். சபையை பரிசுத்தப்படுத்த வருகிறார்.

இந்த பெர்கமு சபையார் சாத்தானின்

அதிகாரம்,ஆளுகை இருக்கிற இடத்தில் குடியிருந்தாலும், இயேசுவின் நாமத்தைப் பற்றிக் கொண்டிருந்தார்கள். ரோம அரசு இந்த சபையில் இருந்த அந்திப்பா என்பவனை கொலை செய்த போதும் அவர்கள் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை மறுதலிக்க வில்லை. இப்படி உறுதியாய் இருந்தவர்களையே கள்ள போதகங்கள் விழத் தள்ளி விட்டது. கள்ள போதகர்களுக்கும், கள்ள தீர்ககதரிசிகளுக்கும் எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு சொன்னார்.

சாத்தான் உறுதியான விசுவாசிகளை கள்ளத்தனமாக ஏமாற்றி, வஞ்சித்து, சோதித்து விழப்பண்ணுகிறான்.பிசாசின் தந்திரங்களை நாம் அறியாதவர்கள் அல்லவே என்றார் பவுல். அவரைப் போல நாமும் சாத்தானின் தந்திரங்களை அறிந்திருக்க வேண்டும். வெற்றி பெறுகிறவர்களுக்கு மறைவான மன்னாவை கொடுப்பேன் என்கிறார் நம் கர்த்தர். வெற்றி பெறாதவர்கள் வனாந்திரத்தில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசித்தது போல தங்கள் தோல்வியின் பலனைப் புசிப்பார்கள்.

# 4.தியதீரா சபை

*வாசித்து தியானிக்க : வெளிப்படுத்தல் 2:18-29*

தியதீரா சபைக்கு கர்த்தர் தம்மை அக்கினி ஜுவாலைப் போன்ற கண்களுடையவராக, பிரகாசமான வெண்கல பாதங்களை உடையவராக, தேவகுமாரனாக வெளிப்படுத்து கிறார். எபேசு சபையில் இல்லாத அன்பையும், அன்பின் கிரியைகளில் இவர்கள் எபேசு சபையைப் போல குறைந்து கொண்டிராமல் பெருகிக் கொண்டிருப்பதை பாராட்டுகிறார். அத்துடன் இவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களாகவும், ஆவியின் கனியாக பொறுமை உடையவர்களாகவும்,ஆவியின் வரமாகிய விசுவாசம் உடையவர்களாகவும் இருப்பதை கர்த்தர் பாராட்டுகிறார். எனினும் இந்தச்சபையில் மிகப் பெரிய குறையையும் கர்த்தர் காண்கிறார்.

தன்னை தீர்க்கதரிசி என்று சொல்லிக் கொண்டு கர்த்தருடைய ஊழியக் காரரை வஞ்சித்து, அவர்களை தேவனை விட்டு திருப்பி, பாவம் செய்ய பண்ணின யேசபேல் என்னும் பெண்ணுக்கு இவர்கள் சபையில் இடம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பிலேயாமின் ஆவி உள்ளவர்கள் பெர்கமு சபையை எப்படி கள்ள உபதேசத்தினால் பாழாக்கிக் கொண்டிருந்தார்களோ , அப்படியே தியதீரா சபையை யேசபேல் என்னும் தீர்க்கதரிசி பாழாக்கிக்

கொண்டிருந்தாள். தேவனுடைய சபை இப்படிப்பட்ட கள்ளதீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்படக்கூடும்.

பழைய ஏற்பாட்டில் ஒரு யேசபேலைப் பற்றி வாசிக்கிறோம்.இவள் சீதோனியர் வம்ச வழி வந்த ஒரு புறஜாதி ஸ்திரீ. இஸ்ரவேல் ராஜா ஆகாபை மயக்கி அவனுக்கு மனைவியானாள். தேசத்தை ஆகாப் அல்ல- அவளே ஆளுகை செய்தாள். இவள் கர்த்தருடைய தீர்ககதரிசி அனேகரைக் கொன்றாள். நாபோத் போன்ற அப்பாவி நீதிமான்களை அவள் கொலை செய்தாள். இஸ்ரவேல் தேசத்தில் பாகால் வணக்கத்தை பரம்ப செய்தாள். ஜனங்களை பாவம் செய்யப் பண்ணினாள். இவளுடைய நோக்கம் - தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொல்ல வேண்டும்,அவர்களை சோர்ந்து போகப் பண்ணவேண்டும் என்பதே. மிகப் பெரிய தீர்க்கதரிசி எலியாவும் கூட இவளுடைய வார்த்தையினால் சோர்ந்து போனான்.

பழைய ஏற்பாட்டு சபையை விக்கிரக ஆராதனை, மந்திரவாதம், பில்லி சூனியம் மூலமாக யேசபேல் பாழாக்கினாள். அதுபோல புதிய ஏற்பாட்டு சபை யேசபேல் போன்ற கள்ள தீர்க்கதரிசிகளின் ஆவிகளால் வஞ்சிக்கப் பட்டு கர்த்தரை விட்டு பின்வாங்கக் கூடும். சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக் கொள்வானே! என்றார் பவுல் (2கொரிந்தியர்.11:14). எனவே தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள், தரிசனங்கள் இவைகளைக் குறித்து நாம் மிகவும் கவனமாக, எச்சரிக்கையாக இருக்க

வேண்டும்.எந்த ஒரு தீர்க்கதரிசனமோ அல்லது வெளிப்பாடோ - இது தேவனிடத்திலிருந்து வந்ததா என்றும் தேவனுடைய வார்த்தைக்கும் கிறிஸ்தவ நடைமுறை ஒழுக்கத்துக்கும் உட்பட்டதாயிருக் கிறதா என்றும் ஆராய்ந்து தீர்மானம் பண்ண வேண்டும். இந்த யேசபேலின் ஆவியை உடையவர்கள் சபையில் உண்டா என்று கண்டறிய வேண்டும். அப்படிப்பட்ட ஆவிகளை நிர்மூலம் பண்ண வேண்டும். சோர்ந்து போன எலியாவை தேவன் பெலப்படுத்தி சீரியாவின் மேல் ராஜாவாக ஆசகேலையும், இஸ்ரவேல் மேல் ராஜாவாக யெகூவையும், தன்னுடைய ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக எலிசாவையும் அபிசேகம் பண்ணு என்று தேவன் எலியாவிடம் கூறினார். ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான் யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான் என்று தேவன் கூறினார். ஒருவனும் தப்ப முடியாது. எனக்கு அன்பான தேவனுடைய பிள்ளைகளே இக்காலத்து யேசபேலின் ஆவிகளை ஜெயிக்க வேண்டுமானால் இரட்டிப்பான அபிசேகம் அல்ல பன்மடங்கு அபிசேகமே தேவை.

ஜெயம் பெறுகிறவனுக்கு ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன் என்கிறார் கர்த்தர். நம் தேசத்திலிருக்கும் விக்கிரக ஆராதனைகள், மந்திரவாதங்கள், பில்லிசூனியங்கள் ஆகியவற்றை ஜெயித்து தேவனுடைய ராஜ்ஜியத்தை கர்த்தர் நமக்கு அதிகாரம் தருவேன் என்கிறார். ஆமென்! அப்படியே செய்யும் ஆண்டவரே!

## 5.சர்தை சபை

*வாசித்து தியானிக்க : வெளிப்படுத்தல்.3:1-6*

சர்தை என்ற பட்டணத்தில் இருந்த சபைக்கு கர்த்தர் எச்சரிப்பின் செய்தியைக் கூறுகிறார். இந்தச் சபையைக் குறித்துக் கூறுவதற்கு கர்த்தர் எந்த நன்மையையும் இதில் காணவில்லை. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்று கூறினவர் உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக காணவில்லை என்கிறார். இந்த சபைக்கு ஜனங்கள் மத்தியில் நல்ல பெயர் இருந்தது. ***உயிருள்ள சபை*** என்று மக்கள் கூறினார்கள். ஆனால் கர்த்தரோ நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் என்றார்.

*மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்* என்று 1சாமுவேல்.16:7ல் கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியிடம் கூறுகிறார். இவர்கள் செய்த கிரியைகள் செத்த கிரியைகளாயிருந்தது. இவர்கள் செய்த ஆராதனை மற்றும் ஊழியங்களில் ஜீவன் இல்லை.

இயேசு கிறிஸ்துவே ஜீவனாயிருக்கிறார் (யோவான்14:6). *குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன்*

*ஜீவன் இல்லாதவன்* (1யோவான்5:12). பரிசுத்த ஆவியானவருக்கு இன்னொரு பெயர் ஜீவனின் ஆவியானவர் (ரோமர் 8:2). தேவனுடைய் வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமுள்ள தாயுமிருக்கிறது (எபிரேயர்.4:12).

இயேசுவை தங்கள் வாழ்வில் அனுபவியாதவர்கள் பரிசுத்த ஆவி தங்களிடத்து இல்லாதவர்கள், தேவனுடைய வார்த்தை இல்லாதவர்கள் இந்த சர்தை சபையில் இருந்தார்கள். எனவேதான் இந்த சபையை கர்த்தர் செத்த சபை என்று கூறுகிறார். இதை வாசிக்கிற நீர் ஒருவேளை சபை ஆராதனைக்கு வரக் கூடும். ஒருவேளை ஜீவனாகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளாத நிலையில் இருந்தால் இப்போதே கிறிஸ்துவை உங்கள் இருதயத்தில் இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். நித்திய ஜீவனைப் பெறுவீர்கள்.

சர்தை சபையில் இன்னொரு சாரார் இருந்தார்கள். ஏற்கெனவே ஜீவனைப் பெற்றவர்கள், அதாவது இரட்சிப்பை பெற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருந்தார்கள். எனவேதான் கர்த்தர் சர்தை சபையின் தூதனை நோக்கி *சாகிறதற் கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து* என்றார் (வெளிப்படுத்தல்.3:2).

சபையில் விசுவாச வாழ்க்கையை விட்டு, கர்த்தரை விட்டு பின்வாங்குகிறவர்கள் இருக்கக்கூடும். ஒரு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் திமிர் வாதத்தினால் கொடிய வேதனைப்பட்டு செத்துக் கொண்டிருந்தான். அவன் கர்த்தரிடம் வந்து ஒரு

வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான். கர்த்தர் அவனிடம்" உன் விசுவாசம் பெரிது, நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் நீ போகலாம். உன் வேலைக்காரன் பிழைத்திருக்கிறான் என்றார். அப்படியே அவனை அவன் பிழைத்திருக்கிறவனாக கண்டான்.

இதை வாசிக்கிற தேவ பிள்ளையே நீ இயேசுவை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக் தூரமாகப் போய்க் கொண்டிருக்கிறாய? ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே என்று ஜெபி. அப்பொழுது நீ பிழைப்பாய்.

சர்தை சபையில் வெகுசிலர் மாத்திரம் தங்கள் வாழ்க்கையைக் கறைப்படுத்தாமல் இருந்தார்கள், அதாவது ஜீவனுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்களைக் குறித்துக் கர்த்தர் இவ்விதமாய் கூறினார்:

1.அவர்கள் பாத்திரவான்கள்

2.என்னோடு வெண்வஸ்திரம் தரித்து நடக்க தகுதி உள்ளவர்கள்

3.ஜீவ புஸ்தகத்தில் இருந்து அவர்கள் பெயரை கிறுக்கிப் போடாமல் பிதா முன்பாகவும் தூதர்கள் முன்பாகவும் அவர்கள் பெயரை அறிக்கை செய்வேன் என்கிறார்.

இந்த மூன்று கூட்டத்தில் நீங்கள் எந்த கூட்டத்தில் இருக்கிறீர்கள்? செத்தவர்கள் கூட்டத்திலா? செத்துக் கொண்டிருக்கிறவர்கள் கூட்டத்திலா? வெண் வஸ்திரம் தரித்து இயேசுவோடு நடக்கிறவர்கள் கூட்டத்திலா? பரிசுத்த ஆவியானவர் உங்கள் மனக்கண்களை திறப்பாராக. ஆமென்!

## 6.பிலதெல்பியா சபை

*வாசித்து தியானிக்க : வெளிப்படுத்தல் 3:7-13*

ஆறாவதாக கர்த்தர் பிலதெல்பியாவில் இருந்த சபையோடு பேசுகிறார். அந்த சபைக்கு தம்மை இவ்விதமாக வெளிப்படுத்துகிறார்:

1)பரிசுத்தர்

2)சத்தியமுள்ளவர்

3)தாவீதின் திறவுகோலை உடையவர்

4)ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்கு திறக்கிறவர்

5)ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவர்.

ஆம். அவர்(இயேசு) பரிசுத்தர். *பரிசுத்தர்* என்பது அவரது நாமம்(ஏசாயா57:15), "நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவியராகமம்.22:32) என்றார். நம்மை (சபையை) பரிசுத்தமாக்குகிறவரும் அவரே.

அவர் சத்தியமுள்ளவர். அவர் பொய் சொல்வதில்லை. அவர் உண்மையுள்ளவர். பிலதெல்பியா சபையைக் குறித்து அவர் சொல்லப்போகும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவர். அவர் தாவீதின் திறவுகோல்களை உடையவர். அதாவது சகல

அதிகாரம் உடையவர். தாவீது சமஸ்த இஸ்ரவேல் மேல் ராஜ்யபாரம் செய்தது போல வானத்திலும் பூமியிலும் அவருக்கு அதிகாரம் உண்டு. அவர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்.

**பிலதெல்பியா சபையில் கர்த்தர் கண்ட நிறைவுகள்:**

1) சோதனை நேரத்தில் அவர்கள் அவருடைய நாமத்தை மறுதலிக்க வில்லை.அவரை அறிந்திருக்கிறதைக் குறித்து பகிரங்கமாக சாட்சி கொடுத்தனர். பெர்கமு சபையும் தன்னை மறுதலிக்கவில்லை என்று கர்த்தர் கூறினார்.

2) அவரது வசனத்தை கைக்கொண்டார்கள். கொஞ்சம் தான் பெலன் இருந்தது. மிகுந்த அபிசேகத்தினால், வல்லமையினால் நிறைந்தவர்கள் அல்ல என்றாலும் அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பிரயாசப்பட்டார்கள்.

ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் வசனத்தை கைக்கொள்ளுவான்.என் பிதா அவனிடத்தில் அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம். ஒருவன் என்னிடத்தில் அன்பாயிராவிட்டால் என் வசனத்தை கைக்கொள்ள மாட்டான் என்று இயேசு கூறினார (யோவான் 14:23,24). பிலதெல்பியா சபையார் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்தார்கள். நாம் எப்படி? இயேசுவில் அன்பாயிருப்பதை எவ்விதம் தெரிவிக்கிறோம்?

பிலதெல்பியா சபைக்கு கர்த்தர் அருளும் வாக்குத்தத்தங்கள்:

1. திறந்த வாசலை உனக்கு முனபாக வைக்கிறேன், திறந்த வாசல் என்பது தேவனோடு நாம் நெருங்கிச் சேரும் சிலாக்கியத்தையும் தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார் என்பதையும் காண்பிக்கிறது. யாக்கோபு கண்ட சொப்பனத்தில் வானம் திறந்திருக்கிறதாகவும் தேவதூதர்கள் ஏறுகிறவர்களாகவும் இறங்குகிறவர்களாகவும் கண்டார். தேவன் யாக்கோபோடு பேசினார், யாக்கோபு தேவனோடு பேசினார். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறி ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது. பிதாவானவர் பேசினார்.

பிலதெல்பியா சபையே உன் ஜெபத்துக்கு வானம் (பரலோகம்) திறக்கப்படும். அதாவது பதில் கிடைக்கும் என்று கர்த்தர் கூறுகிறார். எபேசுப் பட்டணத்தில் எனக்கு அனுகூலமான கதவு (வாசல்) திறக்கப்பட்டிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். பிலதெல்பியா சபைக்கு சுவிசேஷ ஊழியத்திற்கான வாய்ப்புகளை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்கிறார். வாசலை கர்த்தர் திறந்திருக்கிறார். முன்னேறி சுதந்த்தரித்துக் கொள்ள வேண்டியது சபையின் பொறுப்பு.

இயேசுவே! உமது மாம்சம் என்னும் திரை வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை திறந்தீர்.

நானே வாசல்.... என்று கூறினீர். நாங்கள் தயங்கி தயங்கி வாசலுக்கு வெளியே அல்லது வாசலுக்கு முன்பாக நின்று கொண்டிராமல் நீர் எங்களுக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்த்தரித்துக் கொள்ள உதவி செய்யும்.ஜெபம் கேளும் நல்ல பிதாவே! ஆமென்.

பிலதெல்பியா சபைக்கு கர்த்தர் கொடுக்கும் **இரண்டாவது வாக்குத்தத்தம்:**

யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன் இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்.

ஆதி கிறிஸ்தவ சபைகளுக்கு மிகவும் எதிரியாக இருந்து தொல்லை கொடுத்தவர்கள் யூதர்களே. அவர்களில் சிலரை உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் இந்த சபைக்கு வாக்கு கொடுக்கிறார். அவர்கள் உனக்கு முன்பாக வந்து பணிந்து கொள்ளும் படி செய்வேன் என்கிறார்.

இப்போதும் நம்முடைய சபைக்கு எதிரியாக இருந்து செயல்படுகிறவர்களில் சிலரை தேவன் நமக்கு முன்பாக வந்து பணிந்து கொள்ளச் செய்யப் போகிறார். நம்மேல் கர்த்தர் அன்பாயிருப்பதை, பட்சமாயிருப்பதை, நம்மை விரோதிக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளும் படி செய்யப்போகிறார். எப்படி

பெலிஸ்திய இராஜாவாகிய அபிமெலேக்கு ஈசாக்கினிடத்தில் வந்து "நிச்சயமாக கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று கண்டோம்" என்று சொல்லி உடன்படிக்கை பண்ண வந்தானோ, அதுபோல அருமையான தேவனுடைய பிள்ளையே! உன்னை விரோதிக்கிறவர்கள், உன்மேல் பொறாமை கொள்ளுகிறவர்கள் உன் பட்சத்தில் திரும்பும்படி தேவன் செய்வார்.

இந்த சபைக்கு கர்த்தர் அருளும் மூன்றாவது வாக்குத்தத்தம்: பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

ஆம். நம்முடைய வாழ்க்கையில் சோதனைக் காலங்கள் வரத்தான் செய்யும். *நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லா வற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்* (சங்கீதம்.34:19). அப்படிப்பட்ட சோதனை பூமியிலுள்ள எல்லாருக்கும் வந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்று கர்த்தர் கூறுகிறார். ஓ இயேசுவே! நீர் எங்கள் மேல் வைத்திருக்கும் உமது மிகுந்த அன்புக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

கர்த்தர் அருளும் வாக்குத்தத்தம்: ஜெயங்கொள்ளுறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்,

அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை." உனக்கு கொஞ்சம் பெலனிருந்த போதிலும் என்று துவக்கத்தில் கர்த்தர் சொன்னார். இப்பொழுது கொஞ்சம் பெலன் உள்ளவர்களை அதிக பெலனுள்ள தூண்களாக்குவேன் என்று கூறுகிறார். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்தவர்கள் நிச்சயமாக பெலத்தின் மேல் பெலனடைவார்கள். பிரதான அப்போஸ்தலர் களான பேதுரு, யாக்கோபு, யோவானை பவுல் சபையின் தூண்களாக எண்ணப்பட்டவர்கள் என்றார். தேவன் நமக்கு அப்போஸ்தல ஊழியத்தைத் தரப்போகிறார்.

கர்த்தர் இந்த சபைக்குக் கூறும் எச்சரிப்பு: இதோ, சீக்கிரமாய் வருகிறேன் ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

தேவ சபையே கர்த்தர் உனக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டிரு. அவைகள் உனக்குள்ளவைகள். அவர் வரும் வரை இந்த வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டிரு.

# 7.லவோதிக்கேயா சபை

*வாசித்து தியானிக்க: வெளிப்படுத்தல்.3:14-22*

கடைசியாக கர்த்தர் லவோதிக்கேயா சபைக்கு தம்முடைய செய்தியை அதின் போதகருக்கு கூறுகிறார். அந்த சபைக்கு இயேசுகிறிஸ்து உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியாகவும் அதாவது இந்த சபையின் நிலைமையை நேரில் கண்டு கூறும் ஒரு நபராகவும்,எல்லா சிருஸ்டிகளுக்கும் ஆதி காரணராகவும் , சிருஸ்டி கர்த்தராகவும் எல்லாருடைய, எல்லாவற்றினுடைய முடிவையும் அறிந்தவராக *ஆமென்* என்பவராகவும் ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துகிறார்.

இந்த சபை குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாக இருப்பதாகவும், ஆகையால் தன் வாயிலிருந்து இந்த சபையை வாந்தி பண்ணி விடப் போவதாகவும் ஆண்டவர் கூறுகிறார். இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதை விரும்புகிறவர்கள். ஆனால் தேவனை தேடுவதிலோ அவருடைய வசனங்களைக் கைகொள்ளுவதிலோ அக்கறை இல்லாதவர்கள் இந்த லவோதிக்கேயா சபையார். இவர்கள் விசுவாசியாகவும் இல்லாமல் அவிசுவாசியாகவும் இல்லாமல் இருப்பவர்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் இந்த நிலையில் இருந்ததைக்கண்ட எலியா,"நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள் கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்" என்றான். நமது ஆண்டவர் இயேசுவும் இரு எஜமானனுக்கு ஒருவனாலும் ஒரே சமயத்தில் ஊழியம் செய்ய முடியாது என்றார். இந்த சபையார் இப்படி இருந்ததால் "வாந்தி பண்ணி போடுவேன்" அதாவது உன்னை *புறக்கணிப்பேன்* என்று கர்த்தர் கூறுகிறார். மேலும் இவர்கள் ஆவிக்குரிய நிலைமையில் தரித்திரராக இருந்தார்கள், குருடராக அதாவது தேவனை அறிய வேண்டிய பிரகாரமாக அறிய முடியாதவர்களாக இருந்தார்கள். நிர்வாணிகளாக இருந்தார்கள், தேவன் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அருளும் இரட்சிப்பு, நீதி, பரிசுத்தம் மற்றும் பாதுகாப்பு என்ற ஆவிக்குரிய வஸ்திரங்கள் இல்லாதவர்களாக இருந்தார்கள். இப்படியாக பரிதபிக்கப்பட்ட நிலைமையில் இருந்தாலும் தங்கள் பரிதாப நிலைமையை உணராமல் தங்களுக்கு ஒரு குறைவும் இல்லை என்று கூறிக் கொண்டார்கள்.

ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று நம் இயேசு கூறினார். இந்த சபையார் தங்களில் குறைவுகளை உணர்ந்து கொள்ளாமல் இருந்தார்கள். ஆனாலும் கர்த்தர் இந்தச்சபையை நேசித்தார்.

அவர்கள் சீரடையும் ஆலோசனை கூறினார்.

அவர்கள் ஐசுவரியவானாகும் படி நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களை வாங்கிக் கொள்ளவும் பார்வையடையும் படிக்கு கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டும் என்று கூறுகிறார். புடமிடப்பட்ட பொன், வெண் வஸ்திரம் என்பவை பரிசுத்த வாழ்க்கையைக் காண்பிக்கிறது(1பேதுரு1:7).

அதாவது இவர்கள் பரிசுத்தமடையவேண்டும். மேலும் கலிக்கம் என்பது கண் நோயை நீக்கி நல்ல பார்வையைக் கொடுக்கிற மருந்து ஆகும். நம் குறைகளை நமக்கு உணர்த்தி சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறவர் பரிசுத்த ஆவியானவர். அவர் ஞானத்தையும் தெளிவையும் அளிக்கும் ஆவி என்றும் (எபேசியர் 1:17) தெளிந்த புத்தியுள்ள ஆவி என்றும் (2 தீமோத்தேயு 1:7) அழைக்கப்படுகிறார்.

இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட அனலும் குளிரும் இலாத வெதுவெதுப்பான நிலை சபையிலே காணப்படக் கூடும். ஆகவே ஞானதனதயும் தெளிவையும் கொடுக்கிற ஆவியானவருக்கு நாம் இடம் கொடுக்கும்போது நம் குறைகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். கதவைத் தட்டும் இயேசுவின் சப்தத்தைக் கேட்க முடியும். நாம் அவருக்குக் கதவைத் திறக்கும்போது நம்மிடத்தில் பிரவேசித்து நம்மோடு போஜனம் பண்ணுவார். நாமும் அவரோடு போஜனம் பண்ணுவோம். அப்பொழுது நம் ஆவிக்குரிய வாழ்க்கை திருப்தியானதாகவும் அனலுள்ளதாகவும் இருக்கும்.

## ஜெயங் கொள்ளுகிறவன்

வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டு மற்றும் மூன்றாவது அதிகாரங்களில் வரும் ஏழு சபைகளுக்கு கூறப்பட்ட ஒரு பொதுவான எச்சரிப்பு என்னவெனில், *ஜெயம் பெறவேண்டும்* என்பதாகும்.

கிறிஸ்துவின் சபைக்கு எக்காலத்திலும் சத்துருவாகிய சாத்தானாலும் அவனுடைய தூதர்களாலும் தொல்லைகள் நிச்சயம் உண்டு, யுத்தம் உண்டு. எனவேதான் கிறிஸ்து ஒவ்வொரு சபையில் உள்ள ஒவ்வொரு தனிநபரையும் பார்த்து ஜெயம் பெறவேண்டும் என்று எச்சரிக்கிறார். ஜெயம் பெற்றவர்கள்தான் பரதீசை அதாவது பரலோகத்தை சுதந்தரிக்க முடியும். பிசாசோடும் அவனுடைய தூதர்களோடும் எதிர்த்து போரிட்டு ஜெயம் பெறுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆனால் தேவன், அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஒருவனுக்கு ஜெயத்தை வாக்கு பண்ணுகிறார்.

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள் வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள் என்று

தாவீது ராஜா 1நாளாகமம்29:11ல் கூறுகிறார். நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்தபோது, எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே என்று ஜெபிக்கச் சொன்னார் (மத்தேயு.6:13).

கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும் என்று நீதிமொழிகள்21:30,31ல் நாம் வாசிக்கிறோம். ஆம் ஜெயம் கர்த்தரிடத்திலிருந்து நமக்கு வருகிறதாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே மரணம், பாதாளம், பாவம், நியாயப்பிரமாணம் இவைகளின் மேல் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று பவுல் 1கொரிந்தியர்15:55,57ல் சொல்லிவிட்டு,நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுங்கள் என்று கூறுகிறார்.

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று 2கொரிந்தியர்2:14ல் பவுல் கூறுகிறார். தேவன் நமக்கு ஜெயத்தை வாக்கு பண்ணுகிறார். வெற்றியைத் தருகிறார். ஆனால்....

## யார் ஜெயிப்பார்கள்?

1.*1யோவான்5:4,5.* -தேவனால் பிறந்தவர்கள்,அதாவது இரட்சிப்பை பெற்றவர்கள். - இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவர்கள். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

2.*1யோவான்2:13,14.*- தேவ வசனம் யார் ஒருவரில் நிலைத்திருக்கிறதோ, அதாவது யார் வசனத்தை கைக்கொள்ளுகிறார்களோ அவர்கள் பொல்லாங்கனை ஜெயிப்பார்கள்.

3.*எபேசியர்6:10-18.*- கர்த்தருடைய சத்துவத்திலும் அவருடைய வல்லமையிலும் பலப்பட்டவர்கள், அதாவது பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றவர்கள்.தேவனுடைய சர்வாயுதங்களாகிய சத்தியம், தேவநீதி, இரட்சிப்பு, சுவிசேஷத்தின் ஆயுதம், விசுவாசம், தேவனுடைய வார்த்தை ஆகியவற்றை தரித்துக் கொண்டு ஆவியில் நிறைந்து ஜெபிப்பவர்கள், அதாவது ஜெபத்தில் போராடுபவர்களுக்கு தேவன் ஜெயத்தைக் கொடுக்கிறார்.

இதை வாசிக்கிற விசுவாசியே நீ எவ்வித போராட்டத்தில் இருந்தாலும் உனக்கு ஜெயம் கொடுக்கும் தேவன் ஒருவர் உண்டு. ஜெயமோ உனக்கு கர்த்தரால் வரும். ஆமென்.

இந்தப் புத்தகம் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம். உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

தின தியானம் மற்றும் கிறிஸ்தவ விசுவாச வாழ்வை மையமாகக் கொண்டு, கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அமைதி நேர நண்பன் என்ற மாத இதழ் வெளியிடப்படுகிறது. அமைதி நேர நண்பன் இதழ் தேவைப்படுபவர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

எங்கள் முகவரி:
**S. Arputharaj**
30/2, S.R. Ramijabi Complex
Bommanahalli Main Road,
Mangammanapalya, Bangalore - 560 068.
Ph : 080-42001175, Mob : 09379168300